





“காந்தியை எளிமையாக வைத்திருப்பதற்காக ஏராளமாகப் பணம் செலவிட வேண்டியிருக்கிறது'' என்று அந்த காலத்தில் சரோஜினி தேவி சபர்மதி ஆசிரமத்துத் திண்ணையில் சொன்னது இன்னும்கூட உண்மையாக இருக்கிறது. எளிமையான காந்தியை சர்வதேச சினிமாவாக்கிக் காட்ட சர்.ரிச்சர்ட் அட்டன்பரோவுக்கு நம் வரிப்பணம் கோடிக்கணக்கான ரூபாய்கள் தேவைப்படுகிறது.

அம்மாபாடு அம்மணமாம்; கும்பகோணத்ல கோதானமாம் என்ற கதையாய் உள்ளூரில் நல்ல சினிமா வளர்ச்சிக்கேதும் செய்யாத அரசு, வெளியூர்க்காரரை கூப்பிட்டுப் பணத்தை வீணாகச் செலவு செய்கிறது.

உள்ளூரில் ரோஷமுள்ள சினிமாக்காரர் எவராவது இருக்கிறாரா என்று தேடினால் அதுவும் அபூர்வமாய் இருக்கிறது. மிருணாள் சென், கிரீஷ் கர்னாட், எம்.எஸ்.சத்யு ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்தார்கள். அறிக்கைவிட்டதற்குப்பின் அடுத்த நடவடிக்கையையே காணோம். தமிழ்நாட்டைப் பற்றிப் பேசவே கூடாது. இங்கேயுள்ள 'முற்போக்கு' சினிமாக்காரர்கள் எல்லாரும் ஏன் இப்படி நம் வரிப்பணம் காந்திக் கணக்கில் எழுதப்படுவதைப் பற்றி கண்டுக் கொள்ளவில்லை என்று புரியவில்லை.

பொதுவாக 'அவார்டு' வாங்குகிற கலைப்பட டைரக்டர்களுக்கெல்லாம் ஏதாவது கொள்கைப் பிடிப்பு இருக்குமென்று நம்பப்படுகிறது. போன மாதம் டெல்லியில் நடந்த சர்வதேசத் திரைப்பட விழாவில் 'தங்க மயில்’ பரிசு பெற்ற படம் 'ஆக்ரோஷ்'. ஒரு மலை ஜாதிப் பெண் கொலையாகிறாள். அவள் கணவனே குற்றஞ்சாட்டப்படுகிறான். இளம் வழக்கறிஞர் ஒருவர் அவனுக்காக இலவசமாக வாதாட முன் வருகிறார். இந்த வழக்கறிஞர் தானே மலை ஜாதியினரின் கிராமத்துக்குப் போய் உண்மையை அறிய முற்படுகிறார். உள்ளூரின் செல்வாக்குள்ள புள்ளிகள் தடையாய் வர இறுதியில் உண்மை வெல்கிறது. சுபம். படத்தில்

புரட்சி முடிந்துவிட்டது. படத்தின் டைரக்டர் கோவிந் நிஹ்லானி. இவர் தான் அட்டன்பரோ, மன்னிக்கவும் சர்.அட்டன்பரோவின் காந்தி படத்துக்கு செகண்ட் யூனிட் டைரக்டர்.

டெல்லிக்கு அண்மையில் போன போது காந்தி படப்பிடிப்பைப் பார்த்தேன். பிரும்மாண்டமாக நடக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இத்தனைக்குமப்புறம் காந்திதான் காந்தி மாதிரியில்லை; நேரு நேரெதிர். ஏன் அவர்களை மாதிரியே இருக்க வேண்டும், அவசியமில்லை. அவர்கள் மாதிரி நடித்தால் போதும் என்பது சர்.அட்டன்பரோவின் வாதம். படம் பூராவையும் லாங்ஷாட்டில் எடுத்தால் பிரச்னையே இருக்காது.

காந்தியைப் பற்றிய எந்தப்படமும் சர்ச்சைக்குட்பட்டதாகத் தானிருக்க முடியும் என்ற மிருணாள் சென்னின் கருத்து ரொம்ப சரி. சுபாஷ் சந்திர போஸ், பகத்சிங் பற்றிய காந்தியின் கருத்துக்கள் புதிய தலைமுறைக்கு ஏற்க முடியாதனவாயுள்ள நிலையில் இந்தப் படம் முழுமையானதாகவே வர முடியாது.

காந்தி படத்தால் டெல்லியில் இரண்டு விஷயங்கள் நடக்கின்றன. யார் வேண்டுமானாலும் போய் கூட்டத்தில் ஒருத்தராக நடித்து ஒரு நாளைக்கு ஐம்பது ரூபாய், கூட சாப்பாடு சம்பாதிக்கலாம். நாடக, சினிமா முன்அனுபவம் இருந்தால் எழுபத்தைந்து ரூபாய். தமிழ் நாட்டிலிருந்து டெல்லி திரைப்பட விழாவுக்குப் போன பல நண்பர்களின் பற்றாக்குறையை காந்தி தீர்த்தார். (டெல்லி செல்ல விரும்பும் நண்பர்களுக்கு: இப்போது படப்பிடிப்பு பம்பாயில் நடக்கிறது)

இன்னொரு விஷயம்: ஜிப்பா. டெல்லி காதி பவனில் கதர் ஜிப்பாக்களே இல்லை. எல்லாம் காந்தி படத்துக்குப் போய்விட்டன. படம் முடிந்ததும் இவை தெருவோரக் கடைகளுக்குத் திரும்பிவருமென எதிர்பார்க்கலாம். அப்போது பாதி விலைக்கு வாங்கலாம். வாழ்க அட்டன்பரோ.

நகரத்திலுள்ள கல்லூரிகளுக்கும் டவுன்களிலுள்ள கல்லூரிகளுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சென்னைக் கல்லூரிகளில் படிக்கிறவர்கள் பெரும்பான்மை தமிழர்களானாலும் கல்லூரிக் கலாச்சாரம் சிறுபான்மைக்காரர்களுடையதாகவே இருக்கிறது.

அண்மையில் சென்னையில் மூன்று நான்கு கல்லூரிகளில் 'கல்ச்சுரல் ஃபெஸ்ட்டிவல்'கள் நடந்து முடிந்தன. வருடாவருடம் நடக்கிற ஒரு அம்சம் போல ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் இவை நடந்தேயாகவேண்டும் என்றொரு மரபு இருக்கிறது.

இந்த கலாச்சார விழாக்களில் கலாச்சாரம் என்று ஏதாவது உண்டா? நொறுக்குத் தீனி விற்கும் ஸ்டால்கள் சூதாட்டக்கதை நவீனப்படுத்தி வகை வகையாய் “தம்போலா"விலிருந்து மார்பிள்ஸ் வரை வழங்கும் ஸ்டால்கள், இசை, நாடகம் எக்ஸெட்ரா. இதுதான் கலாச்சார விழா, சென்னைக் கல்லூரிகளில் இசையென்பது மேற்கத்திய இசை: மேற்கத்திய சாஸ்திரிய இசை அல்ல. உடம்பில் உஷ்ணம் ஏற்படுத்தும் இசை. டவுன் கல்லூரியில் இசையென்பது இந்திப்படப் பாட்டு. நாடகங்களைப் பற்றிப் பேசவே வேண்டாம். 'மனோகரா' விலிருந்து 'மை ஃபேர் லேடி’ வரையுள்ள ரேஞ்சில் கல்லூரித் தொடர்பான ஜோக்குகளுடன் இவை நிகழும்.

இந்தக் 'கலாச்சார விழா'க்களைக் கொஞ்சம் அதிகாரப் பூர்வமாக்கிக் காட்டுவதற்காகக் கவிதை, பேச்சு, இசைப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கினால் போச்சு.

மேற்படி விழாக்களில் உற்சாகமாய் பங்கேற்று ஸ்நேகமாய் சில மணி நேரங்களையேனும் செலவிட்டு இந்த யந்திர வாழ்க்கையில் தங்கள் ஆத்மாவைக் காப்பாற்றிக் கொள்ளுகிற மாணவர்கள் யாரென்று பார்த்தால், பரம்பரைப் பணக்காரர் வீட்டுப்பிள்ளை, கிராமத்துப் பணக்கார வீட்டிலிருந்து பட்டினத்தில் படிக்க வந்து பேக்வர்ட் ஸ்காலர்ஷிப் பணத்தை அள்ளி இறைக்கிற அன்பு நண்பர்கள். இவர்கள் எப்படியெல்லாம் பணத்தை விரயமாக்கலாம் என்று திட்டமிடத் தங்கள் மூளை உழைப்பை வழங்குகிற நடுத்தர வகுப்பு மேல் ஜாதி மேலை நாகரிக இளைஞர்கள். ’இவர்கள் மத்தியில் என்னதான் நடக்கிறது?’ என்று தெரிந்து கொள்கிற குறுகுறுப்பில் தலைகாட்டி அசடுவழியும் நடுத்தர வகுப்பு சனாதன சீனிவாசன்களும் கிராமத்து ஏழை ஆறுமுகங்களும் உண்டு.

நம் சமூகத்தில் ஆண் பெண்ணுறவுகள் எவ்வளவு கொச்சையாயிருக்கின்றன என்பதற்கான சாட்சிகளாய் இந்த மினியேச்சர் சமூகத்தின் விழாக்களைப் பார்க்கலாம். டவுன் கல்லூரி மாணவர் ஸ்ரீதேவி போஸ்டரோடும் குர்பானி பாட்டோடும் திருப்தியடைய வேண்டியதுதான். சென்னை மாணவருக்கு நிலைமை கொஞ்சம் மேல், 'கலாச்சார விழா’க்களில் மாணவனும் மாணவியும் ஒரு சில மணி நேரம் பேசிக்கொண்டிருக்கவாவது முடியும்.

இந்த விஷயமெல்லாம் எந்தப் பத்திரிகையிலும் வருவதில்லை. இளைஞர் பக்கம் ஒதுக்குகிற ஆங்கிலப் பத்திரிகையிலும் சரி. தமிழ்ப் பத்திரிகைகளிலும் சரி. இதையெல்லாம் இனிமேலாவது வெளியிடுவார்களா?

விசிட்டர் லென்ஸ்<br>**10-02-1981**